விருதுநகர் மாவட்டம்

முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2024

-----

# வகுப்பு 12

# வரலாறு

கால அளவு : 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **20×1=20**

1) காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918

2) **கூற்று** : வ.உ.சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
**காரணம்** : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முன்னுரிமையினை அவர் எதிர்த்தார்.
அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

3) ''சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்'' எனக் கூறியவர்
அ) பால கங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி
இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) பாரதியார்

4) இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர் ............
அ) சுரேந்திரநாத் பானர்ஜி ஆ) பத்ருதீன் தியாப்ஜி
இ) ஏ.ஓ. ஹியூம் ஈ) W.C. பானர்ஜி

5) தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
அ) திலகர் ஆ) அன்னிபெசண்ட் இ) பி.பி. வாடியா ஈ) ஹெச் எஸ் ஆல்காட்

6) இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
அ) 1920 ஆ) 1925 இ) 1930 ஈ) 1935

7) முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

8) காந்தியடிகளின் அரசியல் குரு யார்?
அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே

9) கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்?
அ) ஹிந்துஸ்தான் சோசியலிஸ்ட் ரிபப்ளிகன் அசோசியேஷன் ஆ) வங்காள சபை
இ) இந்திய குடியரசு இராணுவம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

10) 1937 இல் நடைபெற்ற தேர்தலில் ........... காங்கிரஸ் வெற்றி பெற்றது.
அ) 5 மாகாணங்களில் ஆ) 12 மாகாணங்களில் இ) 8 மாகாணங்களில் ஈ) 7 மாகாணங்களில்

11) 1923 இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
அ) சுதந்திரா கட்சி ஆ) சுயராஜ்ய கட்சி இ) கம்யூனிஸ்ட் கட்சி ஈ) கதார் கட்சி

12) மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ...........
அ) காஷ்மீர் ஆ) அசாம் இ) ஆந்திரா ஈ) ஒரிஸா

13) பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
அ) பங்கின் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்
ஆ) G. சுப்பிரமணியம் - விடிவெள்ளிக் கழகம்
இ) மிண்டோ பிரபு - பல்கலைக்கழகச் சட்டம், 1904
ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

14) லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம் பெற்ற முதல் இந்தியர் ...........
அ) ரஹமத்துல்லா சயானி ஆ) சர் சையது அகமது கான்
இ) சையது அமீர் அலி ஈ) பக்ருதீன் தயாப்ஜி

15) ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை
அ) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல்
ஆ) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பி அளித்தல்
இ) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்
ஈ) அரசுக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபடுதல்
அ) அ மற்றும் ஆ ஆ) ஆ மற்றும் இ இ) அ மற்றும் ஈ ஈ) இ மற்றும் ஈ

16) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?
அ) 2005 ஆ) 2006 இ) 2007 ஈ) 2008

17) இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?
அ) பிரான்ஸ் ஆ) ஜெர்மனி இ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஈ) ஜப்பான்

18) பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் ........... ஆவார்.
அ) இரண்டாம் கெய்சர் வில்லியம் ஆ) யாமமோடோ இ) ஹிரோஹிடோ ஈ) ஸ்கூஸ்னிக்

19) ஐக்கிய நாடுகள் சபை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
அ) 1946 நவம்பர் 24 ஆ) 1944 அக்டோபர் 24
இ) 1945 நவம்பர் 24 ஈ) 1945 அக்டோபர் 24

20) சூயஸ் கால்வாய் செங்கடலை ............ இணைக்கிறது.
அ) ஏடன் வளைகுடாவுடன் ஆ) காம்பே வளைகுடாவுடன்
இ) மத்திய தரைக்கடலுடன் ஈ) அரபிக்கடலுடன்

## பகுதி - II

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்: (30வது வினா கட்டாய வினா)** **7×2=14**

21) தொடக்க கால முக்கிய தேசியவாதிகளைக் கண்டறிக.
22) மகாதேவ் கோவிந்த் ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்?
23) தேசியம் என்றால் என்ன?
24) அன்னிபெசண்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிகைகளின் பெயர்களைக் கூறுக.
25) அரசமைப்பின் ஷரத்து 370ன் முக்கியத்துவம் என்ன?
26) இரண்டாவது லாகூர் சதி என்று அறியப்படும் நிகழ்வு யாது?
27) இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன?
28) அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றின் உளவு நிறுவனங்களைக் குறிப்பிடவும்.
29) அமெரிக்க விடுதலைப் போருக்கு தாமஸ் பெயினின் அறிவுத்திறன் சார்ந்த பங்களிப்பு என்ன?
30) ஹிட்லர் பற்றி எழுதுக.

## பகுதி - III

**பின்வரும் வினாக்களில் எவையேனும் ஏழு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **7×3=21**

31) மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்த' குறிப்புகளை ஆய்க.
32) மாற்றத்தை விரும்புபவர்கள், மாற்றத்தை விரும்பாதவர்கள் - வேறுபடுத்துக.
33) தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காக சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்பு குறித்து எழுதுக.
34) இந்தியாவில் பசுமைப்புரட்சியின் விளைவுகள் யாவை?
35) ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக.
36) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.
37) இந்திய தேசிய காங்கிரஸிலிருந்து சுபாஷ் சந்திரபோஸ் நீக்கப்பட்டதற்கான காரணங்களை விளக்குக.
38) அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
39) அணிசேரா இயக்கம் பற்றி எழுதுக.
40) 1492ல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **7×5=35**

41) அ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கினை பற்றி எழுதுக. **(அல்லது)**
ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.

42) அ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக. **(அல்லது)**
ஆ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

43) அ) திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவங்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்குமேடைக்கு இட்டுச் சென்றது?

44) அ) டாக்டர் அம்பேத்கரின் கல்விப்பணி குறித்து, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக. **(அல்லது)**
ஆ) சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக பட்டேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதையும் விளக்குக.

45) அ) இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது என்பதனை தகுந்த காரணத்தோடு விளக்குக. **(அல்லது)**
ஆ) இத்தாலி மறுமலர்ச்சிக்கு பிளாரன்ஸ் நகர மக்கள் ஆற்றிய பங்களிப்பை ஆராயவும்.

46) அ) அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும். **(அல்லது)**
ஆ) **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் முதல் உலகப்போரில் பங்குபெற்ற கீழ்க்கண்ட நாடுகளை குறித்துக் காட்டுக:**
(i) பிரிட்டன் (ii) பிரான்ஸ் (iii) ரஷ்யா (iv) இத்தாலி (v) அமெரிக்கா

47) அ) பாஸ்டில் சிறை தகர்ப்பு முதல் ரோபஸ்பியர் கொல்லப்பட்டது வரையிலுமான பிரஞ்சுப் புரட்சியின் போக்கினை வரைக. **(அல்லது)**
ஆ) 1900 முதல் 1930 வரையிலான இந்திய தேசிய இயக்கத்தில் ஏதேனும் ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com